## வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்!

# மாவட்டக் கழகத் தோழர்கள் தீவிரமாக ஈடுபடுவீர்!

### திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!





திண்டுக்கல், அக்.9-

திண்டுக்கல் கிழக்கு மேற்கு மாவட்டக் கழகத் தோழர்கள் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுமாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி, ஐ.பி. செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.24 அன்று வெளியிடவுள்ளது. 29.10.24 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 09.11.2024 (சனிக்கிழமை), 10.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), 23.11.24 (சனிக்கிழமை), 24.11.24 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்களும் நடைபெறவுள்ளது. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும்.

இறுதி வாக்காளர் பட்டியல் 06.01.2025 அன்று வெளியிடப்படும்.

இதன் அடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர்

பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள பட்டியலிலிருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம்6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement ID Card) படிவம்8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும்.

மேலும் வாக்காளர் சேர்ப்பதற்கு www.nvsp.in மற்றும் www.voterportal.eci.gov.in ஆகிய இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்பு வர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம்6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ள நாட்களிலும் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க் கிளை, வார்டு கிளை செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற முன்னாள், இன்னாள் பிரதிநிதிகள், அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA 2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLCs) ஆகியோர் இணைந்து இவ்வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித்தல், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளமாறும், இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

## தென்காசி வடக்கு மாவட்டத்தில்

# மருத்துவ அணி சார்பில் கிராமங்கள்தோறும் மருத்துவ முகாம்!

### மாவட்ட மருத்துவ அணிக் கூட்டத்தில் தீர்மானம்!



தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் எஸ்.எஸ். செண்பக விநாயகம், மாவட்ட மருத்துவ அணி பொறுப்பாளர் இல. சரவணன், மாவட்ட அமைப்பாளர் மருத்துவர் மணிகண்டன், மாவட்ட மருத்துவ அணி தலைவர், மருத்துவர் சுமதி ஆகியோர் உள்ளனர்.

தென்காசி, அக்.9-

தென்காசி வடக்கு மாவட்டத்தில் மாவட்ட மருத்துவ அணைக்கு சார்பில் கிராமங்கள்தோறும் மருத்துவ முகாம்கள் நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

தமிழக முதல்வர் தளபதி யாரின் ஆனைக்கு இனங்க மருத்துவ அணியின் மாநில செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. மற்றும் மாநில மருத்துவ அணியின் தலைவர் மருத்துவர் கனிமொழி என்விஎன் சோமுவின் ஆலோசனையின்படியும் தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவ அணியின் கலந்தாய்வு கூட்டம் சங்கரன்கோவில் மாவட்ட கழகத்தில் நடைபெற்றது .. இந்த கலந்தாய்வு கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கழக செயலாளர் ராஜா ஈஸ்வரன் எம்.எல்.ஏ., மாநில மருத்துவ அணி துணை செயலாளர் மரு.எஸ்.எஸ். செண்பக விநாயகம், மாவட்ட பொறுப்பாளர் இல.சரவணன் அவர்கள் வருகை தந்து சிறப்புரை ஆற்றி மருத்துவ அணியின் செயல்பாட்டை ஊக்குவித்தார்கள்.

கலந்தாய்வு கூட்டத்திற்கு தலைமை வகித்து கடந்தாண்டில் மருத்துவ அணி செய்த நிகழ்வுகளை மாவட்ட அமைப்பாளர் மரு. மணிகண்டன் மாவட்ட மருத்துவ அணியின் தலைவர் மருத்துவர் சுமதி முன்னிலையில் விளக்கி பேசினார்.

இக்கூட்டத்தில் ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது. அது வருமாறு:-

தமிழக துணை முதல்வராக நியமிக்கப்பட்ட இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி அவர்களுக்கு வாழ்த்தும் நியமித்த தமிழக முதல்வர் தளபதியார்க்கு நன்றியும் தெரிவித்து

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நியமனத்தை கொண்டாடும் வகையில் பசியில்லா தமிழகம் என்ற அடிப்படையில் சிவகிரியில் வருடம் முழுவதும் தொடர் அன்னதானம் வழங்குவது எனவும் ...

மருத்துவ முகாம்களை கிராமங்களில் நடத்துவது எனவும்

உடல் உறுப்பு தானம் விழிப்புணர்வு பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் விதமாக ஐந்து நபர்களை வைத்து தொடக்கமாக உடல் உறுப்பு தான பத்திரம் பெற வைப்பது...

தமிழகத்தில் பாராளுமன்றத் தேர்தலில் 40/40 வெற்றியை பெற காரணமாக இருந்த தளபதியாரை பாராட்டுவதோடு வருகின்ற சட்டபேரவை தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற முழு முயற்சியுடன் பாடுபடுவது என தீர்மானிக்கப் பட்டது

Tncea தமிழ்நாடு கிளினிக்கல் ஆக்ட் எஸ்டபிளிஸ் மென்டில் மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ள அட்வைசரி கமிட்டியில் ஏற்கபடும் உறுப்பினர்கள் மருத்துவர்கள் செவிலியர்கள் ஆயஷ் மருத்துவர்கள் என நமது மருத்துவ அணியில் இருப்பவர்களுக்கே முன்னுரிமை பெற்று அந்த கமிட்டியில் இடம் பெற செய்தல்.

இந்த ஆய்வு கூட்டத்தில் மாவட்ட துணை தலைவர் முத்துகுமார் வரவேற்புரை ஆற்றினார்

துணை அமைப்பாளர்கள் சுரேஷ் ,குருராஜ் நாகலெட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு மருத்துவ அணியின் கழக பணியிலும் மக்கள் சேவையிலும் உறுதுணையாய் ஒன்றிணைந்து இருந்து செயல்படுவோம் என உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள்.இறுதியில் பேச்சியம்மாள் நன்றியுரை கூறினார்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தென்னிந்திய அளவிலான மாபெரும் பைக் பந்தயம், வீரர்கள் சீறிப்பாய்ந்த வாகனங்கள் பார்ப்போரை வியக்க வைத்தது. 200க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் பங்கேற்பு. பொள்ளாச்சிஅக் (06.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலை ஆச்சிபட்டி ரைட் கொங்கு சிட்டி மைதானத்தில். கோவை தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் பொள்ளாச்சி ஆச்சிபட்டியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தென்றல் மணிமாறன் ஏற்பாட்டில் மாபெரும் பைக் பந்தயம் நடைபெற்றது. இதில் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்தார். இந்த போட்டியில் தமிழ்நாடு, கேரளா , ஆந்திரா, கர்நாடகா மாநிலம் மற்றும் வெளிநாட்டு போட்டிகளிலும் பங்கேற்ற ஏராளமான பைக் வீரர்கள் கலந்து கொண்டனர். 16 விதமாக போட்டிகள் நடைபெற்றது.இதில் குழந்தைகளுக்கான பைக் பந்தயம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது மேலும் இதில் வெற்றி பெறும் வீரர்களுக்கு ரூபாய் 3.50 லட்சம் மதிப்புள்ள பரிசுகள் மற்றும் கோப்பைகளை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, கழக சட்டத்திட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் ஆகியோர் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினர். இதில் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மருத்துவர் மகேந்திரன் அவர்கள் கழகத்தின் இரு வண்ணக்கொடியை ஏற்றி வைத்தார், கழக விவசாய அணி துணை தலைவர் தமிழ்மணி, பொதுக்குழு உறுப்பினர் ஆச்சிபட்டி பாலகிருஷ்ணன், நகர மன்ற துணை தலைவர் எஸ்.கௌதமன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.ஏ.செந்தில் குமார் ஆகியோர் முன்னிலையில் கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சபரி கார்த்திகேயன் வரவேற்புரையில் பொள்ளாச்சி பைக் பாபு நன்றி கூறினார். இதில் வழக்கறிஞர் அதிபதி, பனப்பட்டி தினகரன், நவநீத கிருஷ்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.


